# முதியோரைத் துன்புறுத்துதல் தனிப்பட்ட விவகாரமல்ல.

## ஒன்றிணைந்து நம் மூத்தோரை நம்மால் பாதுகாக்க முடியும்.

### முதியோரைத் துன்புறுத்துதல் என்பது என்ன?

முதியோரைத் துன்புறுத்துதல் என்பது வயதான ஒருவரின் ஆரோக்கியத்திற்கோ நலனுக்கோ ஆபத்தை உண்டாக்கக்கூடிய செயலை அல்லது செயலின்மையைக் குறிப்பிடுகிறது.

## துன்புறுத்தலின் வகைகள்




**உடல்ரீதியான துன்புறுத்தல்**

அடித்தல், உதைத்தல் அல்லது அறைதல் போன்ற வன்முறையான செயல்களால் உடலளவில் வலியும் காயமும் உண்டாக்குதல்



**புறக்கணிப்பு**

உணவு, உடை, மருத்துவக் கவனிப்பு போன்ற அத்தியாவசியப் பராமரிப்பை வழங்கத் தவறுதல்




**மனதளவிலான / உணர்வுபூர்வமான துன்புறுத்தல்**

கத்துதல் போன்ற வாய்மொழி துன்புறுத்தல், மிரட்டுதல் அல்லது மற்றவர்களுடன் தொடர்பில் இருப்பதைத் தடுத்தல்



**பாலியல் துன்புறுத்தல்**

முதியோரின் சம்மதமின்றி, அவர் விரும்பப்படாத பாலியல் செயல்களில் ஈடுபட அவரைக் கட்டாயப்படுத்துதல்



**சுயப் புறக்கணிப்பு**

மூன்று வேளை உணவு அல்லது தனிப்பட்ட சுகாதாரம் போன்ற அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசியப் பணிகளைச் செய்யத் தவறுவதன் விளைவாக, ஆபத்தான அல்லது சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்ளுதல்

## உதவி எளிதில் கிடைக்கும்.

தேசிய வன்முறை எதிர்ப்பு மற்றும் பாலியல் துன்புறுத்தல் உதவித் தொலைபேசி சேவையை **1800-777-0000** என்ற எண்ணில் அழையுங்கள்.

ஒருவருடைய உயிருக்கும் பாதுகாப்புக்கும் உடனடி ஆபத்து ஏற்பட்டால், தயவுசெய்து காவல்துறையை **999** என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது **71999** என்ற எண்ணுக்கு குறுந்தகவல் அனுப்பவும்.

www.msf.gov.sg/breakthesilence

BREAK THE SILENCE

MSF | MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT

உலக முதியோர் வன்முறை விழிப்புணர்வு தினம் முன்னிட்டு வழங்கப்படும் தகவல் இது.